திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள நிலவள வங்கிகள்.

* 623 வினு.—திரு. சோ. அழகர்சாமி : மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டத்தில் நிலவள வங்கிகள்மூலம் 1971-72-ம் ஆண்டு வழங்கப்பட்ட மொத்தக் கடன் தொகை எவ்வளவு ?

(இ) இதில் புதிய கிணறுகள் வெட்டக் கொடுத்த மொத்தத் தொகை எவ்வளவு ?

(உ) மற்ற அபிவிருத்தி வேலைகளுக்குக் கொடுத்த தொகை எவ்வளவு ?

(எ) முன் கடன் தீர்க்கக் கொடுக்கப்பட்ட தொகை எவ்வளவு ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனுர் : (அ) ரூபாய் 93.63 இலட்சம். (ரூபாய் தொண்ணூற்று மூன்று லட்சத்து அறுபத்து மூவாயிரம்).

(இ) ரூபாய் 22.40 இலட்சம் (ரூபாய் இருபத்திரண்டு லட்சத்து நாற்பதனுயிரம்).

(உ) ரூபாய் 56.41 இலட்சம். (ரூபாய் ஐம்பத்தி ஆறு லட்சத்து நாற்பத்தி ஓராயிரம்).

(எ) ரூ. 14.82 இலட்சம். (ரூபாய் பதினுன்கு லட்சத்து எண்பத்திரெண்டாயிரம்).

மு.ப. 10–00 திரு. சோ. அழகர்சாமி : 1971-72-ம் ஆண்டுக்கு மொத்தம் இந்தக் கூட்டுறவு நிலவள வங்கிகள்மூலம் கடன் கொடுப்பதற்கு டார்கெட்டாக நிர்ணயிக்கப்பட்ட தொகை எவ்வளவு? அதில் எந்தளவிற்கு இப்போது கொடுக்கப்பட்டிருக்கிறது ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனுர் : டார்கெட் என்ற இலக்கு, ரூ. 103.5 லட்சம். அதில் ரூ. 93.63 லட்சம்தான் கொடுக்க முடிந்தது. டார்கெட்டுக்குக் கொஞ்சம் குறைவாக இருக்கிறது. ஆனுல் இந்த ஆண்டு அதையும் சேர்த்துக்கொடுக்கலாம் என்று கருதிக்கொண்டிருக்கிறேம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவையின் அனுமதியோடு கேள்வி நேரத்தினை சிறிது நீட்டித்துக்கொள்கிறேன்.

திரு. எஸ். ஆறுமுகம் : முன்கடனைத் தீர்க்க கொடுக்கக்கூடிய தொகை, முன்கடனைத் தீர்ப்பதற்காக ஒரு சத விகித அடிப்படையில் நிலவள வங்கி மூலம் கொடுக்கப்படுகிறது. அதைச் சிறிது உயர்த்தி விவசாயிகள் முன்கடன் தீர்ப்பதற்காக மனுச் செய்து கொண்டால் அவர்களுக்குத் தாராளமாகக் கொடுக்கிற அளவிற்கு நிலவள வங்கிகளுக்கு அனுமதி வழங்கப்படுமா ?

1973 ஏப்ரல் 3]

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: முன்னால் நில அடமான வங்கிகளாக இருந்தபோது முன்கடன் தீர்க்கத் தாராளமாக பணம் கொடுக்கப்பட்டு வந்தது. இப்போது நிலவள வங்கிகளாக ஆக்கியிருக்கிறார்கள். ஆகவே முன் கடன், முன்னால் வாங்கப்பட்ட கடன் நிலத்தை வளப்படுத்துவதற்கு, நிலத்தில் அதிகமான விளைச்சல் காணப் பயன்படுத்தப்பட்டிருக்குமானால் அந்தக் கடனைத் தீர்ப்பதற்கு இப்போதும் நாம் கடன் வழங்கிவருகிறோம்.

எலி ஒழிப்புத்திட்டம்

*** 624 வினா.—திரு. என். கிட்டப்பா:** மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா.—

(அ) அகில இந்திய எலி ஒழிப்புத் திட்டத்தின் கீழ் நமது மாநிலத்திற்கு மத்திய அரசு ஏதேனும் உதவி அளித்து வருகிறதா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. ஆ. கு. சுப்பையா: விவசாயத்தைப் பெரிதும் பாழடிப்பது இந்த எலித் தொல்லைதான். ஆகவே இந்த எலிகளை ஒழிப்பதற்கு அரசு ஏதாவது நவீன முறைகளைக் கையாளுமா?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: தமிழக அரசுச் சார்பில் பயிர் பாதுகாப்பு பொறுத்தவரைக்கான உதவித் தொகையோடு எலி பாஷாணமாகிய, துத்தநாக பாஸ்பேட்டுக்கான உதவித் தொகை தாற்காலிகமாக நிறுத்திவைக்கப்பட்டிருக்கிறது. தற்போது மருந்து பகிர்ந்தளிக்கப்பட்டு வருகிறது. துத்தநாக பாஸ்பேட், எலிமருந்து போதுமான அளவிற்குப் பல்வேறு விவசாயக் கிடங்குகளில் சேமித்து வைக்கப்பட்டு உழவர்களுக்குத் தேவைப்பட்டபோது பகிர்ந்தளிக்கப்பட்டு வருகிறது.

திரு. கே. எ. வகாப்: முன்பெல்லாம் வயல்களில் அதிகமாகப் பாம்புகள் இருக்கும். அதனால் எலிகள் வருவதில்லை. ஆனால் இப்போது பாம்புகள் எல்லாம் ஒழிந்துவிட்டன. ஆகவே அரசாங்கம் விஷம் இல்லாத பாம்புகளை, ஒரு பண்ணைபோல் வைத்து வளர்த்துவைத்து இந்த எலிகளைப் பிடிப்பதற்கு ஏதாவது வழிவகை செய்யுமா?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: பாம்பிற்காக எலி வளர்த்து எலியைப் பிடிக்கப் பூனையை வளர்க்கும் பிரச்சினை இல்லை.